ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1691/47 - 2011 පෙබරවාරි 02 වැනි බදාදා - 2011.02.02

1691/47 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டம்

2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் பிரிவுகள் 34 ஆம் பிரிவின் கீழ் இப்பணிப்புரை விடுக்கப்படுகிறது.

கே. எம். ஏ. என். டவுலாகல,
பணிப்பாளர்,
வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2010, திசெம்பர் 09.

**2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (ஆகக் குறைந்த மைய மூலதனம்) பணிப்புரை**

1. இப்பணிப்புரையானது 2010 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (ஆகக் குறைந்த மூலதனம்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பந்தி (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பகிரங்கக் கம்பனியாக பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்களுக்கும் (இதனகத்துப் பின்னர் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடுதல் கம்பனி எனக் குறிப்பிடப்படும்) உடனடியாக ஏற்புடையதாதலும் வேண்டும். எடுத்துக்காட்டல்.

2. ஒவ்வொரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் கீழே காட்டப்பட்டிருக்கின்றவாறான தொகைக்கு குறையாததொரு பழுதுறா மைய மூலதனத்தினைப் பேணுதல் வேண்டும்:- அடுத்த 5 ஆண்டு காலப்பகுதிக்கான குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப் பாடு.

**அட்டவணை**

| ஆகக் குறைந்த மைய மூலதனத் தேவைப்பாடுகள் (ரூ. மில்.) | நடைமுறைக்கு வரும் திகதி |
|---|---|
| 100 | 2012.01.01 இலிருந்து |
| 150 | 2013.01.01 இலிருந்து |
| 200 | 2014.01.01 இலிருந்து |
| 250 | 2015.01.01 இலிருந்து |
| 300 | 2016.01.01 இலிருந்து |

மைய மூல தனத்தின் வரைவிலக் கணம்.

3. “மைய மூலதனம்” என்பது பின்வருவனவற்றின் கூட்டுத்தொகை எனப் பொருள்படும் :-

(அ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரணப் பங்குகள் :

ஒதுக்குகள் அல்லது மிகைகள் அல்லது பிடித்து வைத்திருக்கப்பட்ட இலாபங்கள் என்பவற்றிற்கு எதிராக வழங்கப்பட்ட ஏதேனும் பங்குகள் மற்றும் பகுதியளவில் செலுத்தப்பட்ட பங்குகள் அல்லது இருப்புக்களைப் பொறுத்தவரை செலுத்தப்பட்ட தொகை என்பன நீங்கலாக வழங்கப்பட்டு முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள்/பொதுவான இருப்புக்கள் ;

(ஆ) ஒன்று சேர்க்கப்படாத, மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகள்:

பங்கிலாபக் கொடுப்பனவுகளுக்கு பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ உதவியளிப்பதற்கு இலாபத்தன்மை போதுமானதாக இல்லாத சந்தர்ப்பத்தில் பங்கிலாபங்களின் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்ட அல்லது நிரந்தரமாக தளர்த்தப்படக்கூடியவிடத்து, வழங்கப்பட்டு முழுமையாகச் செலுத்தப்பட்ட ஒன்று சேராத மற்றும் மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகள் ;

(இ) பங்குக் கட்டுப்பணம் :

ஏற்புடைத்தானவிடத்து சாதாரண பங்குகள் பொதுவான பங்கு அல்லது ஒன்று சேராத மற்றும் மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் முகப்புப் பெறுமதியிலும் பார்க்க வழங்கல் விலைகளின் மிகை ;

(ஈ) நியதி ஒதுக்கு நிதியம் :

2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுதல் (ஒதுக்கு நிதியம்) பணிப்புரையின் கீழ் பேணப்படும் ஒதுக்கு நிதியத்தின் வரவிலுள்ள தொகை ;

(உ) பொதுவான அல்லது ஏனைய கட்டற்ற ஒதுக்குகள் :

இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின்படி வைத்திருக்கப்பட்ட இலாபங்கள், பங்குக் கட்டுப்பணங்கள் அல்லது தேறல் செய்யப்பட்ட மிகைகள் என்பனவற்றின் ஒதுக்கீட்டின் மூலம் உருவாக்கப்பட்ட அல்லது அதிகரிக்கப்பட்டு பொதுவான அல்லது ஏனைய ஒதுக்குகள் வடிவிலுள்ள வெளிப்படுத்தப்பட்ட ஒதுக்குகள் ;

(ஊ) வெளியிடப்பட்ட வைத்திருக்கப்பட்ட இலாபங்கள்/(ஒன்று சேர்ந்த நட்டங்கள்) :

இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு முதலீட்டுச் சொத்துக்களின் மீள் மதிப்பீட்டிலிருந்தும் தோன்றிய மிகைகள் நீங்கலான முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டு செல்லப்பட்ட இலாப/(நட்டக்) கணக்கிலிருந்து மீதி ;

(எ) வெளியிடப்படாத நடைமுறையாண்டின் இலாபங்கள்/(நட்டங்கள்) :

இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் அறிக்கையின் முடிவுத் திகதிக்குப் பின்னர் உழைக்கப்பட்ட/ உறப்பட்ட நடைமுறையாண்டு இலாபங்கள்/ (நட்டங்கள்) (நிலையான மற்றும் நீண்டகால முதலீடுகளின் விற்பனையிலிருந்து தோன்றிய வரிக்குப் பின்னைய ஏதேனும் மிகை/ இழப்பு நீங்கலாக) ;

(ஏ) நிலையான மற்றும் நீண்டகால முதலீடுகளின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட, வரிக்குப் பின்னைய ஏதேனும் மிகை/(நட்டம்)

கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் அறிக்கையின் முடிவுத் திகதிக்குப் பின்னர் நிலையான மற்றும் நீண்டகால முதலீடுகளின் விற்பனையிலிருந்து கிடைத்த வரிக்குப் பின்யை ஏதேனும் மிகை/(நட்டம்).

2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பணிப்புரை இரத்துச் செய்யப்படு கிறது.

4. 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுதல் (ஆகக் குறைந்த மூலதனம்) பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

2- 435

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.